நகராட்சி அலுவலகம்
சத்தியமங்கலம்

2022-ஆம் ஆண்டு மே மாதம் 09.05.2022-ஆம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் நடைபெற்ற சாதாரண கூட்டத்தின் நடவடிக்கைகள்

**பொருள் : 1 ஒத்திவைக்கப்பட்ட தீர்மானம்**

எ.ஆறுமுகம் த/பெ.அர்த்தனாரி முதலியார் மற்றும் 6 நபர்கள், கோட்டுவீராம்பாளையம், சத்தியமங்கலம் அவர்களின் விண்ணப்பம் மற்றும் நில வருவாய் ஆய்வாளர், சத்தியமங்கலம் உள்வட்டம், சத்தியமங்கலம் வட்டம் அவர்களின் கடிதத்தில் சத்தியமங்கலம் வட்டம், சத்தியமங்கலம் கிராமம் ரீ.ச.162/1, தற்கால நகர நில அளவை எண்.Ward C,Block No.10,T.S.No.1/1 இல் உள்ள காலையில் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட ஆழ்துளை கிணற்றில் இருந்து தண்ணீரை இறவை செய்து,மேற்படி வட்டம் சத்தியமங்கலம் கிராமம் ரீ.ச.எண்கள்.84,97,100 ஆகிய காலைகளில் உள்ள பூமிக்கு விவசாய பயன்பாடு மற்றும் கால்நடைகளின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்ய சத்தியமங்கலம் அரசு புறம்போக்கு புலங்கள் வழியாக பூமிக்கடியில் குழாய்பதித்து தண்ணீர் எடுத்துச்செல்ல பாதைவரி செலுத்த அனுமதி கோரப்பட்டது. இப்பொருள் மீது நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கப்படுகிறது

(கட்டு எண்.151/2021/இ1)

தீர்மானம் எண் : 42 அனுமதிக்கப்பட்டது. நாள் 09.05.2022

பொருள் : 2

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் வரி, கடை வாடகை செலுத்த அறிவிப்பு செய்ய நகராட்சிக்கு Amplifier, மற்றும் Entone Unit Horn தற்போது ஏதுமில்லை. அறிவிப்பு செய்ய வாடகைக்கு எடுத்தால் தொகை அதிகமாக வரும். எனவே TNSTC (CBE) ERODE REGION CO-OPERATIVE STORES LTD, ERODE நிறுவனத்தின் நேரடியாக 3 எண்ணிக்கை கொள்முதல் செய்ய பெறப்பட்ட விலைப்பட்டியல் ரூ.16,650/- மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.

(ந. க. எண். 740/2021/அ1)

தீர்மானம் எண் : 43 அனுமதிக்கப்பட்டது. நாள் 09.05.2022

பொருள் : 3

தமிழ்நாடு அரசு அரசிதழ் (சிறப்பு) எண்.194 நாள்.30.03.2022 மற்றும் அரசாணை (நிலை) எண். 52 நாள்.30.03.2022 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை இல் அனைத்து நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் சொத்து வரி பொது சீராய்வு செய்து 2022–2023 (01.04.2022) முதலாம் அரையாண்டு முதல் மண்டல அடிப்படை மதிப்பு மறு நிர்ணயம் செய்திட உத்திரவிடப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1 நாள்.01.04.2022 இல் மேற்படி சொத்து வரி மற்றும் காலியிட வரி எவ்வாறு நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என வழிகாட்டு நெறிமுறைகள் அளிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட தமிழ்நாடு அரசு அரசிதழ் (சிறப்பு) எண்.194 நாள்.30.03.2022 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4)

துறை அரசாணை (நிலை) எண்.52 நாள்.30.03.2022, மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1 நாள்.01.04.2022 மேற்காண் அரசு வழிகாட்டுதலின்படி சொத்துவரி சீராய்வு தொடர்பாக தினசரி நாளிதழ்கள் விளம்பரம் செய்தல் மற்றும் சொத்துவரி சுயமதிப்பீடு (குடியிருப்பு கட்டிடம், வணிகக் கட்டிடம் , காலிமனைவரி , தொழிற்சாலை கட்டிடம், சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடம் ) படிவங்கள், அச்சிடுதல் ஈரோடு மாவட்ட அரசிதழில் சொத்துவரி பொது சீராய்வு தொடர்பான விளம்பரங்கள் வெளியீடு செய்வதற்கான செலவினங்கள் மற்றம் அவ்வப்போது வரப்பெறும் சுற்றறிக்கைகளின் வழிகாட்டுதலின்படி மேற்கொள்ளப்படும் அனைத்து செலவினங்களும் உத்தேசமாக ரூ.3,00,000/– ம் பொது நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க. எண். 626/2022/அ1)

தீர்மானம் எண் : 44 அனுமதிக்கப்பட்டது. நாள் 09.05.2022

பொருள் : 4

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான தினசரி மார்க்கெட்டில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம், 31.03.2022 ம் தேதியுடன் முடிவடைவதையொட்டி, மேற்கண்ட இனம் 25.01.2022 ம் தேதி முதல் பொது ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. ஆனால் ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளிகள் கோர யாரும் முன்வராத நிலையில் 2022 நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலுக்கான தேதிகள் அறிவிக்கப்பட்டதால், தேர்தல் விதி நடைமுறைக்கு வரப்பட்டதால், ஏலம் விடுவதை ஒத்தி வைக்கப்பட்டது. நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் முடிவுற்று நடத்தை விதிகள் அமுலுக்கு வரப்பட்டதை தொடர்ந்து, 22.03.2022 ம் தேதி முதல் பொது ஏலம் கோரப்பட்டு வரும் நிலையில், மேற்கண்ட இனம் மேலும் ஏலம் கோர முன்வரவில்லை, இந்நிலையில் உரிமம் காலம் 31.03.2022 ம் தேதி முடிவடைவதால், இதன் உரிமம் இனம் பொது ஏலத்தில் எடுக்கும் வரை பழைய குத்தகை வாடகையினை கணக்கிட்டு, பழைய ஏல உரிமைதாரர் திரு. எஸ். ஆர். முருகன் அவர்களுக்கு மேலும் ஏப்ரல் 2022 (ம) மே 2022 வரை இரண்டு மாதங்களுக்கு நிர்வாக நலன் கருதி நகர் மன்றம் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கியமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1200/2020/அ3)

தீர்மானம் எண் : 45 அனுமதிக்கப்பட்டது. நாள் 09.05.2022

பொருள் : 5

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட ரங்கசமுத்திரம் மற்றும் கோம்புபள்ளம் தலைமை நீரேற்று நிலையங்களிலும் பாதுகாக்கப்பட்ட பொதுமக்களுக்கு குடிநீர் வழங்க ஏதுவாக திரவநிலை குளோரின் வாயு 900 கி.கி. அளவுள்ள நிரப்பப்பட்ட 16 எண்ணிக்கைகள் (இதில் ரங்கசமுத்திரம் மற்றும் கோம்புபள்ளம்

தலைமை நீரேற்று நிலையத்திற்கும்) தேவைப்படுகிறது. மேலும், நடப்பு ஆண்டிற்கு (2022-2023) கொள்முதல் செய்ய உத்தேச செலவினம் தொகை ரூ.4.75 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -**

1)மன்றம் அனுமதிக்கலாம்

2)இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்,2022-2023 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து கொள்ளலாம்.

(கட்டு எண். 337/2018/இ1)

தீர்மானம் எண் : 46 அனுமதிக்கப்பட்டது. நாள் 09.05.2022

**பொருள் : 6**

சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.10 புளியங்கோம்பைக்கு செல்லும் சாலையின் இடபுறம் (நட்சத்திரா கார்டன் எதிரில்) 50 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அங்கு வசிக்கும் பொதுமக்கள் மழை காலங்களில் மழைநீர் தேங்கி சாலையில் செல்ல முடியாமலும், மழைநீர் தேங்குவதால் சுகாதார கேடு ஏற்பட்டு நோய்கள் பரவும் அபாயம் உள்ளதாகவும், பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்தப்குதியில் மழைநீர் வடிகால் அமைக்க மதிப்பீடு ரூ.8.20 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இச்செலவினம் 2022-2023 ஆம் ஆண்டு வருவாய் நிதி திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

(ந. க. எண்.100/2016/இ1)

தீர்மானம் எண் : 47 அனுமதிக்கப்பட்டது. நாள் 09.05.2022

**பொருள் : 7**

சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.22 வேணுகோபாலசுவாமி கோயில் வீதியில் கம்யூனிஸ்ட் ஆபீஸ் பகுதியில், ஐயப்பன் கோவில் முன்புறம் அமைந்த சந்திலும் சுமார் 100 க்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அந்த சாலையில் மழை காலங்களில் மழை நீர் தேங்கி நின்று சாலையில் செல்ல முடியாமல் பொது மக்கள் தவித்து வருகிறார்கள். மேலும், மழைகாலங்களில் மழைநீர் தேங்கி நின்று சுகாதார கேடு ஏற்பட்டு நோய்கள் பரவும் அபாயம் உள்ளதாக பொது மக்கள் மற்றும் நகர் மன்ற உறுப்பினர் புகார் அளித்து வந்துள்ளார்கள். எனவே மேற்கண்ட இடங்களில் மழை நீர் வடிகால் அமைக்க மதிப்பீடு **ரூ.3.50 இலட்சத்திற்கு** தயாரிக்கப்பட்டுள்ளது. இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)இச்செலவினம் 2022-2023 ஆம் ஆண்டு வருவாய் நிதி திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

(ந. க. எண்.100/2016/இ1)

தீர்மானம் எண் : 48 அனுமதிக்கப்பட்டது. நாள் 09.05.2022

**பொருள் : 8**

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.27 திருமலை நகர், பைப்கல்வெர்ட் உடைந்து விட்டது. இதனால் வாகனங்கள் பொதுமக்கள் சாலையில் செல்வதற்கு மிகவும் சிரமபடுகின்றனர். எனவே, மேற்கண்ட இடத்தில் புதிதாக கல்வெர்ட் அமைக்கவும், ஏற்கனவே உள்ள வடிகால் சீர் செய்யவும், மதிப்பீடு **ரூ.1.60**

இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச்செலவினம் 2022-2023 ஆம் ஆண்டு வருவாய் நிதி திட்டத்தில் மேற்கொள்ளலாம்.
(ந. க. எண்.100/2016/இ1)

தீர்மானம் எண் : 49 அனுமதிக்கப்பட்டது. நாள் 09.05.2022

பொருள் : 9

சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.2 சுசிந்திரன் லே அவுட் முன்புறம் உள்ள கல்வெர்ட் பழுதடைந்து விழுந்து விட்டது. இதனால் அந்த வழியில் செல்லும் நான்கு சக்கர வாகனங்கள், இரண்டு சக்கர வாகனங்கள் மற்றும் பொது மக்கள் அந்த பாலத்தின் வழியாக சென்று வரமுடியவில்லை. பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகின்றனர். எனவே, மேற்கண்ட பகுதியில் உள்ள அந்த சிறுபாலத்தினை அகற்றம் செய்து புதியதாக பாலம் அமைக்க மதிப்பீடு **ரூ.5.00 இலட்சத்திற்கு** தயாரிக்கப்பட்டுள்ளது. இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச்செலவினம் 2022-2023 ஆம் ஆண்டு வருவாய் நிதி திட்டத்தில் மேற்கொள்ளலாம்.
(ந. க. எண்.100/2016/இ1)

தீர்மானம் எண் : 50 அனுமதிக்கப்பட்டது. நாள் 09.05.2022

பொருள் : 10

இந்நகர் மன்ற தீர்மான எண். 10/ 30.3.2022 மற்றும் 765 /20.12.2021 இன்படி கல்வி நிதி மற்றும் வருவாய் நிதி திட்டத்தின் கீழ் சத்தியமங்கலம் -1 நகராட்சி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள சத்துணவு மற்றும் பொருள் வைப்பு அறை கட்டிடம் பழுதுகள் சரி செய்தல் மற்றும் சத்தியமங்கலம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர் மன்ற தலைவர் அவர்களின் அறையில் சிறப்பு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பணிகளுக்கு முறையே தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு 06.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தலா ஒரு பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் ஆணையாளர் அவர்களின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

சத்தியமங்கலம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர் மன்ற தலைவர் அவர்களின் அறையில் சிறப்பு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் மதிப்பீடு தொகை ரூ.4,90,000/-

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | Thiru.R.Arumugam Contractor Sathyamangalam | ரூ.4,90,000/- | ரூ.4,31,540/- | மதிப்பீடு தொகையினை விட 0.02 சதவீதம் குறைவு |
| 2 | M/s.Vino Constructions Contractor Bhavani Sagar | | ரூ.4,31,946/- | மதிப்பீடு தொகையினை விட 0.07 சதவீதம் அதிகம் |

சத்தியமங்கலம்-1 நகராட்சி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள சத்துணவு மற்றும் பொருள்வைப்பு அறை கட்டிடம் பழுதுகள் சரி செய்தல் மதிப்பீடு தொகை ரூ.2,50,000/-

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | Thiru.R.Arumugam Contractor Sathyamangalam | ரூ.2,50,000 | ரூ.2,01,196/- | மதிப்பீடு தொகையினை விட 0.18 சதவீதம் குறைவு |
| 2 | M/s.Vino Constructions Contractor Bhavani Sagar | | ரூ.2,02,313/- | மதிப்பீடு தொகையினை விட 0.38 சதவீதம் அதிகம் |

மேற்கண்ட இரண்டு பணிகளுக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைக்கு பணிகள் செய்ய Thiru.R.Arumugam Contractor Sathyamangalam ஒப்புகொண்டுள்ளதை தொடர்ந்து அவர்களின் ஒப்புந்தப்புள்ளி ஏற்க நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Thiru.R.Arumugam Contractor Sathyamangalam அவர்களின் ஒப்புந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

(ந. க.எண். 1232/2021/இ1 மற்றும் 579/2022/இ1)

தீர்மானம் எண் : 51 அனுமதிக்கப்பட்டது. நாள் 09.05.2022

**பொருள் : 11**

திட்ட இயக்குநர்/முதன்மை செயலாளர், தேசிய சுகாதார குழுமத்தின் மாநில நல வாழ்வுச்சங்க தலைவர்/குழும இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.1869/NUHM/SHS/2015 நாள்.18.10.2021 (வரப்பெற்ற நாள்.07.03.2022) சத்தியமங்கலம் நகராட்சி ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு மேல் உள்ளதால் அனுமதிக்கப்பட்ட ஒரு நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு ரூ.75.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஈரோடு மாவட்ட நலவாழ்ச்சங்கம்/நிர்வாக செயலர்/துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.5586/ஆ1/2021 நாள்.16.03.2022 ஆணையில் மொத்தம் ரூ75.00 இலட்சம் ஒதுக்கீட்டில் முதல் தவணையாக ரூ.10.00 இலட்சம் மானிய தொகை விடுவிக்கப்பட்டுள்ளது. வரப்பெற்ற ஆணை நகர் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1)மன்றம் பார்வையிடப்பட்டது.

2)இத்திட்டம் முழு அரசு மானியத்தில் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

(ந. க. எண். 452/2022/இ1)

தீர்மானம் எண் : 52 அனுமதிக்கப்பட்டது. நாள் 09.05.2022

**பொருள் : 12**

சத்தியமங்கலம் நகராட்சியில் குடிநீர் விநியோக பணிகள் மேம்பாடு செய்யும் பணிக்கு (Improvements of Water supply Scheme) Friction Loss, Hydraulic Calculation, Type and Size of Pipe மற்றும் இதர தொழில் நுட்ப பணிகள் கணக்கீடு செய்ய போதிய மென்பொருள் (Jem Software, Epanet Software) நகராட்சி அலுவலகத்தில் இல்லை. இதனால், இப்பணியினை ஆட்கள் மூலம் கணக்கீடு செய்தால்

கூட திட்ட அறிக்கை தயாரிக்க பலமாதங்கள் ஆகிவிடும். மேலும், திட்ட விரிவான அறிக்கை அடுத்த வார இறுதிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளதாலும், போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தாலும், அம்ரூட் 2.0 திட்டத்தின் முக்கியத்துவம் கருத்தில் கொண்டும் நகராட்சிக்கு மானியம் பெறவும் நகராட்சி பகுதியில் உள்ள குடிநீர் அவசர அவசியத்தை முன்னிட்டும் அனைத்து குடியிருப்பு வாசிகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கவும், ஏற்கனவே மன்ற பொருள் தீர்மானம் எண். 40/4 நாள். 11.04.2022 அனுமதி பெறப்பட்டதை ரத்து செய்தும் தற்போது அவசர அவசியம் கருதி உத்தேச செலவினம் ரூ.35.00 கோடிக்கு திட்ட அறிக்கை தயார் செய்ய தனியார் ஆலோசகர் நியமனம் செய்யவும், இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.
3) நகர் மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கு நகர் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.எண்.690/2021/இ1)

தீர்மானம் எண் : 53 அனுமதிக்கப்பட்டது. நாள் 09.05.2022

பொருள் : 13

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.9511/2022/SBM நாள்.19.04.2022 மற்றும் ந.க.எண்.5990/2022/SBM நாள்.11.04.2022 இன்படி தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு -2022-2023 மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் சமுதாய மற்றும் பொது கழிப்பிடங்கள் புதியதாக கட்டுதல் மற்றும் மேம்படுத்தும் பணிக்கு திட்ட அறிக்கை கோரப்பட்டது. அதன்படி இந்நகராட்சிக்கு மொத்த நான்கு சமுதாய கழிப்பிடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் 2021-2022 மற்றும் 2022-2023 க்கு தலா இரண்டு கழிப்பிடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

எனவே, கீழ்கண்ட பணிகள் முழுமையாக திட்ட நிதியில் மேற்கொள்ள நகர் மன்ற தீர்மானம் எதிர்நோக்கி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதிக்கு வேண்டப்படுகிறது

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை |
|---|---|---|
| 1 | சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட தோப்பூர் காலனியில் 16 கழிவறை இருக்கை மற்றும் 3 சிறுநீர் கழிக்கும் இருக்கை கொண்ட சமுதாய கழிப்பிடங்கள் கட்டுதல் | ரூ.24.96 இலட்சம் |
| 2 | சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட அண்ணா நகர் பகுதியில் 16 கழிவறை இருக்கை மற்றும் 3 சிறுநீர் கழிக்கும் இருக்கை கொண்ட சமுதாய கழிப்பிடங்கள் கட்டுதல் | ரூ.24.96 இலட்சம் |
| | **மொத்தம்** | **ரூ.49.92 இலட்சம்** |
| | 2022-2023 | |
| 3 | சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட கோம்புபள்ளம் தலைமை நீரேற்று நிலையத்தில் இரண்டு இருக்கை கொண்ட சமுதாய கழிப்பிடங்கள் கட்டுதல் | ரூ.3.00 இலட்சம |
| 4 | சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட கட்டபொம்மன் நகர் மேல்நிலைத்தொட்டி வளாகத்தில் இரண்டு இருக்கை கொண்ட சமுதாய கழிப்பிடங்கள் கட்டுதல் | ரூ.3.00 இலட்சம் |
| | **மொத்தம்** | **ரூ.6.00 இலட்சம்** |

| | பெருமொத்தம் | ரூ.55.92 இலட்சம் |
|---|---|---|

மன்றம் முன் அனுமதி வழங்கப்பப்படுகிறது.

(கட்டு எண்.737/2022/இ1)

தீர்மானம் எண் : 54 மன்றம் முன் அனுமதி வழங்கப்பப்படுகிறது. நாள் 09.05.2022

பொருள் : 14

தமிழக அரசாணை (எம்.எஸ்) எண்.15 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.20.01.2022 மற்றும் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.20543/2021/பி2 நாள்.24.01.2022 இன்படி கலைஞர் நகர்புற மேம்பாடு திட்டம் -2021-2022 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்கு பகுதிக்கு உட்பட்ட சத்தி -அத்தாணி ரோட்டில் அமைந்துள்ள தினசரி மார்க்கெட் மேம்பாடு செய்ய ரூ.469.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும், நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தலைமை பொறியாளர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.001/2022/DO1 Dated.28.02.2022 இன்படி தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டு முறையே 06.04.2022 அன்று மாநில அளவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளன.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1 | M/s.Akila Constructions Erode |
| 2 | M/s.Hari Ram Constructions Erode |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் தொழில் நுட்ப தகுதி ஆராய்ந்ததில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் தகுதிவாய்ந்ததாக உள்ளது. எனவே, ஒப்பந்தப்புள்ளி விலைபட்டியல் (price Bid) திறக்கும் பொருட்டு இரண்டு ஒப்பந்ததாரர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு 21.04.2022 அன்று மேற்கண்ட இரண்டு ஒப்பந்ததரர்கள் வழங்கிய விலைப்பட்டியல் திறக்கப்பட்டத்தில் கீழ்கண்டவாறு விலைப்பட்டியல் வழங்கப்பட்டுள்ளன, ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது. பட்டியல் ஆணையாளர் அவர்களின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

Development of Daily Market in ward No.11 T.S.No.406/1 (Athani Road )
Estimate Amount :RS.469.00 Lakhs

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | M/s.Akila Constructions Erode | ரூ.469.00 இலட்சம் | ரூ.4,28,72,247.00 | மதிப்பீடு தொகையினை விட 6.18 சதவீதம் அதிகம் |
| 2 | M/s.Hari Ram Constructions Erode | | ரூ.4,37,34,484.00 | மதிப்பீடு தொகையினை விட 8.31 சதவீதம் அதிகம் |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் M/s.Akila Constructions Erode ஒப்பந்ததாரர் அவர்கள் மதிப்பீடு தொகையினை விட 6.18 சதவீதம் கூடுதலாக வழங்கியுள்ளார்கள். M/s.Hari Ram Constructions Erode ஒப்பந்ததாரர் அவர்கள் மதிப்பீடு தொகையினை விட 8.31 சதவீதம் கூடுதலாக வழங்கியுள்ளார்கள். எனவே, வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய

M/s.Akila Constructions Erode தனது ஒப்பந்தப்புள்ளி சதவீதம் 6.18% குறைத்து தரக்கோரி மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு விலை குறைப்பு கடிதம் Negotitaion Letter கடிதம் அனுப்பபட்டு 22.04.2022 அன்று ஒப்பந்ததாரர் M/s.Akila Constructions Erode தனது கடிதத்தில் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் 6.18% இருந்து 4.99% சதவீத்திற்கு குறைத்து தந்து உள்ளார்கள். மேலும், கட்டுமான பொருட்கள் திடீர் விலையேற்றத்தால் 4.99% இல் இருந்து குறைக்க இயலாது என்று தெரிவித்துள்ளார்கள். எனவே, அரசு திட்டப்பணி என்பதால் ஒப்பந்தப்புள்ளி ஏற்க நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
1) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக மதிப்பீட்டை விட 4.99% அதிகமாக பணி செய்து கொடுக்க M/s.Akila Constructions, Erode ஒப்பந்ததாரர் சம்மத கடிதம் வழங்கியுள்ளதாலும் உரிய காலத்தில் பணி முடிக்கப்பட வேண்டும் என்பதாலும் ஒப்பந்தப்புள்ளி கோருவதால் கால தாமதம் ஏற்படும் என்பதாலும் மாநில உள்ளாட்சித் துறை பொறியாளர் கையேடு பகுதி -1 பாகம் 2.7.2 ன் படி ஒப்பந்தப்புள்ளி ஏற்கலாம்.
2) மதிப்பீட்டிற்கு மேல் ஏற்படும் கூடுதல் செலவிற்கு வருவாய் நிதி 2022-2023 இல் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.
3) திட்டப்பணிகள் முக்கியத்துவம் கருதி மன்ற அனுமதி எதிர் நோக்கி வேலை உத்திரவு வழங்கப்பட்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந. க. எண். 796/2021/இ1)

தீர்மானம் எண் : 55 அங்கீகரிக்கப்பட்டது. நாள் 09.05.2022

பொருள் : 15

சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.10 இல் புளியங்கோம்பையில் ஏற்கனவே உள்ள ஆழ்குழாய் கிணற்றில் இருந்து HDPE Tank அமைத்து அதன் மூலம் பைப்லைன் நீட்டிப்பு செய்யவும், மொண்டிகரடு HDPE Tank அமைத்து ஏற்கனவே உள்ள ஆழ்குழாய் கிணற்றில் இருந்து பைப்லைன் நீட்டிப்பு செய்யும் பணிக்கு ரூ.5,15,000/- ஆகும். இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.

(கட்டு எண்.100/2016/இ1)

தீர்மானம் எண் : 56 அங்கீகரிக்கப்பட்டது. நாள் 09.05.2022

பொருள் : 16

சத்தியமங்கலம் நகராட்சியில் 2021-2022 ஆம் ஆண்டு குடிநீர் திட்டத்தின் கீழ் கீழ்கண்ட பணிகளுக்கு இந்நகர் மன்ற தீர்மானம் எண்.21/30.3.2022, 13/30.3.2022, 11/30.3.2022,19/30.3.2022 இன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. முறையே தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு 28.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தலா ஒரு பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது. கீழ்கண்டவாறு ஒப்புந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

வேலையின் பெயர்: வார்டு எண்.19 மாரியம்மன் கோவில், பிள்ளையார் கோவில், பிள்ளையார் கோவில் பகுதியில் பைப்லைன் விஸ்தரிப்பு செய்யும் பணி மற்றும் கழிப்பிடம் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் மதிப்பீடு தொகை ரூ.5.00 இலட்சம்

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | M/s.Vino Constructions Contractor Bhavani Sagar | ரூ.5.00 இலட்சம் | ரூ.4,32,111/- | மதிப்பீடு தொகையினை விட 0.13 குறைவு |
| 2 | M/s.VBN Builders Contractor Tiruppur | | ரூ.4,33,611/- | மதிப்பீடு தொகையினை விட 0.22 அதிகம் |
| வேலையின் பெயர்: வார்டு எண்.5 குள்ளங்கரடு பகுதியில் குடிநீர் விநியோகம் செய்தல் மதிப்பீடு தொகை .ரூ.2.00 இலட்சம் | | | | |
| 1 | M/s.Vino Constructions Contractor Bhavani Sagar | ரூ.2.00 இலட்சம் | ரூ.1,74,809/- | மதிப்பீடு தொகையினை விட 0.37 குறைவு |
| 2 | M/s.VBN Builders Contractor Tiruppur | | ரூ.1,78,799/- | மதிப்பீடு தொகையினை விட 1.90 அதிகம் |
| வேலையின் பெயர்: சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட 27 வார்டுகளில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய்கள் உடைப்புகள் பழுதுகள் சரி செய்யும் பணிகள் மேற்கொள்ளுதல் மதிப்பீடு தொகை ரூ.5.00 இலட்சம் | | | | |
| 1 | M/s.Vino Constructions Contractor Bhavani Sagar | ரூ.5.00 இலட்சம் | ரூ.4,40,507/- | மதிப்பீடு தொகையினை விட 0.12 குறைவு |
| 2 | M/s.VBN Builders Contractor Tiruppur | | ரூ.4,47,757/- | மதிப்பீடு தொகையினை விட 1.52 அதிகம் |

சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட 27 வார்டுகளில் உள்ள பம்புகள் மின் மோட்டார்களை பழுது நீக்கம் செய்தல் மதிப்பீடு தொகை.ரூ.5.00 இலட்சம்

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | M/s.Vino Constructions Contractor Bhavani Sagar | ரூ.5.00 இலட்சம் | ரூ.4,41,600/- | மதிப்பீடு தொகையினை விட 0.08 குறைவு |
| 2 | M/s.VBN Builders Contractor Tiruppur | | ரூ.4,46,550/- | மதிப்பீடு தொகையினை விட 1.08 அதிகம் |

மேற்கண்ட நான்கு பணிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s.Vino Constructions Contractor, Bhavani Sagar அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)வ.எண். 1 முதல் 4 வரை உள்ள பணிகளுக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s.Vino Constructions Contractor, Bhavani Sagar அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தீர்மானம் எண் : 57 அங்கீகரிக்கப்பட்டது. நாள் 09.05.2022

**பொருள் : 17**

ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.192/அ3/2021 நாள்.28.02.2022 இன்படி சத்தியமங்கலம் நகராட்சிக்கு நிர்மலா தியேட்டர் ரோடு அங்கன்வாடி மையத்தில் உள்ள தரை, சமையலறை, இருப்பறை முழுவதும் பழுது, டைல்ஸ், மற்றும் சுவர் பழுது ஆகிய பணிகளுக்கு ரூ.2.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு 24.03.2022,12.04.2022 மற்றும் 28.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இப்பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது. கீழ்கண்டவாறு ஒப்புந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | Thiru.R.Arumugam Contractor Sathyamangalam | ரூ.2.00 இலட்சம் | ரூ.1,75,339/- | மதிப்பீடு தொகையினை விட 0.13 குறைவு |
| 2 | M/s.Vino Constructions Contractor Bhavani Sagar | | ரூ.1,76,339/- | மதிப்பீடு தொகையினை விட 0.43 அதிகம் |

மேற்கண்ட நான்கு பணிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Thiru.R.Arumugam Contractor, Sathyamangalam அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Thiru.R.Arumugam Contractor, Sathyamangalam அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தீர்மானம் எண் : 58 அங்கீகரிக்கப்பட்டது. நாள் 09.05.2022

**பொருள் : 18**

இந்நகராட்சிக்கு உட்பட்ட பாதாள சாக்கடை திட்டம் மண்டல எண். 1, 2 மற்றும் 3 இல் மண்டல எண்.3 பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு சுத்திகரிப்பு நிலையம் செயல்படுத்த தயார் நிலையில் உள்ளது. எனவும், இதற்கு குறைந்தபட்சம் 1000 எண்ணிக்கை வீட்டு கழிவு நீர் மற்றும் WC இணைப்பு வழங்கப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார்கள். மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் ஆய்வு கூட்டத்தில் சுத்திகரிக்கப்பட நீர் வெளியேற்ற பவானி ஆற்றில் PWD,TNPCB,Consent to Establish பெறப்பட்டும் பின்னர் renewal செய்யும் பொருட்டு பொழுது பொதுமக்களின் ஆட்சேபணை கருத்தில் கொண்டு மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆற்றுக்கு பதிலாக விவசாயத்திற்கு அல்லது தொழிற்சாலைகளுக்கு விட ஏற்பாடு செய்ய அறிவுறுத்தப்பட்டது. தற்போது பல விளம்பரங்கள் வெளியிடப்பட்டும், இக்கரைகோம்பை செந்தில் ஆண்டவர், அக்ஷரா பேப்பர் மில் நேரிடையாக அணுகியும் சுத்திகரிக்கப்பட்ட நீர் Parameter வழங்கப்பட்டும், சுத்திகரிக்கப்பட்ட நீரை எடுத்துக்கொள்ள கோரிக்கை வைக்கப்பட்டதில் மொத்த Distance 14 km இதில் பாசனத்திற்காக பல குழாய்கள் குறுக்காக செல்கிறது. எனவே, சாத்திய கூறுகள் இல்லை என தெரிவித்தார்கள். மேலும், விவசாய பணிக்கு 1992 முதல் 1995 வரை பெரும்பாலான விவசாயிகள் ஆற்றுபடுக்கையில் உள்ள கிணறுகள் மூலம் குழாய்கள்

அமைத்து பாசன வசதி பெற்று விட்டதால் விவசாயிகள் யாரும் முன்வரவில்லை. இதனால் பாதாள சாக்கடை திட்ட இணைப்புகள் முழு வேகத்தில் வழங்கப்பட வில்லை. இந்நிலையில் 08.01.2022 இல் மதிப்பிற்குரிய கூடுதல் தலைமை செயலாளர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஆய்வு கூட்டம் நடைபெற்றதில் பாதாள சாக்கடை திட்டம் இணைப்பு முழு வேகத்துடன் நகராட்சி அலுவலர்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்கள், TNPCB அணுகி (Consent to Operate) CTO பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என உத்திரவிடப்பட்டதால் 1002 இணைப்புகள் (பாதாள சாக்கடை இணைப்புகள்) வழங்கப்பட்டது. இதனால் Sewerage Generation நாள் ஒன்றிக்கு சுமார் 3.00 இலட்சம் பெறப்பட்டது. மேலும், Unidentified Drainage Water Mixing ஏற்பட்டுள்ளது என தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உதவி செயற்பொறியாளர் தெரிவித்துள்ளபடி Sewerage Generation காரணமாக சுத்திகரிப்பு செய்து நீரை வெளியேற்றுவது குறித்த 12.04.2022 அன்று நகராட்சி அலுவலகத்தில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. அதில் முக்கிய அரசியல் பிரமுகர்கள், பிற துறை அலுவலர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் கலந்து கொண்டனர். அந்த கூட்டத்தில் சுத்திகரிக்கப்பட்ட நீரை பவானி ஆற்றில் விடகூடாது என்றும் மாற்று வழிவகை மேற்கொள்ளுமாறு பெருபாலானவர்கள் இக்கருத்தினை முன் வைத்துள்ளார்கள்.

அதன் பின்னர் கடந்த 23.04.2022 மறுபடியும் கருத்து கேட்பு கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பல்வேறு அரசியல் பிரமுகர்கள், பிற துறை அலுவலர்கள் மற்றும் தனியார் தொண்டு நிறுவனங்கள் கலந்து கொண்டுள்ளனர்கள். இந்த கூட்டத்தில் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

- கழிவு நீர் சேகரம், விநியோகம், மறுசுழற்சி செய்யும் பணிக்கு கண்காணிப்பு குழு அமைப்பட வேண்டும்.
- தற்பொழுது வழங்கப்பட்ட 1002 இணைப்புகளிலிருந்து வெளியேற்றப்பட்ட கழிவு நீர் மட்டும் சுழற்சி செய்யப்பட்டு ஆற்றில் விடலாம்.
- கண்காணிப்பு குழு புதிதாக அமைக்கப்பட்டு மாதந்தோறும் கூட்டம் நடத்தப்பட்டு உடனுக்குடன் தகவல் தெரிவிக்கப்பட வேண்டும்.
- கழிவு நீர் சுத்திகரிப்பு செய்யப்பட்டு ஒரு கீழ் நிலைத்தொட்டி கட்டப்பட்டு அதில் நீரை விட்டு அருகிலுள்ள விவசாய நிலங்களில் பாசனத்ததிற்காக பயன்படுத்தி கொள்ள புதிய திட்ட மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட வேண்டும்.
- ஒப்பந்ததாரர் உரிய கருவிகள் பயன்படுத்தி கழிவு நீர் அடைப்பு ஏற்படாத வண்ணம் கண்காணிக்கப்பட வேண்டும்.

மேற்கண்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் தற்காலிகமானது என்று முடிவு செய்யபட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட இரண்டு கூட்டங்கள் நடத்தப்பட்டதில் சேகரிக்கப்பட்ட கழிவு நீர் மறுசுழற்சி செய்ய தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திடம் **CTO (Consent to Operate)** பெறப்பட வேண்டும் என்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது. மேலும், துர்நாற்றம் வீசுவது தடுக்கவும், பிற நோய்கள் பரவாமல் தடுக்கவும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் இயக்குவது அவசியம் ஆகும். மேலும், புதை வடிகால் இணைப்பு (House Service Connection) வழங்கவும் நகர் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் கூடுதல் மதிப்பீடு தயாரிக்க அனுமதிக்கலாம்.

3) தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திடம் CTO (Consent to Operate) பெற உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.

4)புதை வடிகால் இணைப்பு (House Service Connection) வழங்கவது தற்காலிமாக நிறுத்தி வைக்கலாம்.

5) முன் அனுமதி அளிக்கப்பட்டது.

(ந. க. எண்.4444/2011/இ1)

தீர்மானம் எண் : 59 அங்கீகரிக்கப்பட்டது. நாள் 09.05.2022

**பொருள் : 19**

சத்தியமங்கலம் நகராட்சி ரங்கசமுத்திரம் கிராமம், வார்டு -E, பிளாக் - 6, நகரளவு எண். 20/1, 2 கொண்ட இடத்தில் 1.58 ஏக்கர் பரப்பளவில் வீட்டு மனைகள் அமைக்க நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் (பொ) மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம், ஈரோடு

அவர்களின் கடிதம் ந. க. எண். 3779/2021/ஈ.மா. 2 நாள். 29.09.2021 மற்றும் ந. க. எண். 3779/2021/ஈ.மா.2 நாள். 12.11.2021 ஆகிய தேதிகளில் மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் பொறியியல் பிரிவின் சான்றும் நாள். 16.03.2022 ல் பெறப்பட்டுள்ளது. ஆகவே இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந. க. எண். 1373/2021/எப்.1)

தீர்மானம் எண் : 60 அனுமதி வழங்கப்பட்டது. நாள் 09.05.2022

**பொருள் : 20**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-28 அவர்களின் கடிதம் எண்.28369/ஜே3 நாள்.04.12.2018 இன்படி சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வார்டு எண். 1,2,17 முதல் வார்டுகள் 22 வரையுள்ள பகுதிகளில் 01.04.2020 முதல் 31.03.2021 வரை (Outsourcing) தனியார் வசம் பணி ஒப்படைப்பு செய்து 50 தூய்மை பணியாளர்கள் வெளிமுகமை முறையில் தூய்மைப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வந்தனர். தற்போது வி.பி.என்.பில்டர்ஸ் என்னும் தனியார் நிறுவனத்திற்கு தொடர்ந்து ஒரு மாத காலம் என்ற அடிப்படையில் 01.04.2021 முதல் 30.4.2022 வரை பணி நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்படி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதிக்காலம் முடிவடையும் நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அனுமதி பெறப்பட கருத்துரு நகராட்சிகள் நிர்வாக இயக்குநரகம் அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

மேற்காணும் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள 50 தூய்மை பணியாளர்களின் வெளிமுகமை நிறுவனத்தின் ஒப்பந்தக்காலத்தினை தற்காலிகமாக பணி நீட்டிப்பு 01.05.2022 முதல் 30.06.2022 வரையிலான இரண்டு மாத காலத்திற்கு பொது சுகாதார பணியின் அவசியம் கருதி தனியார் நிறுவனமான வி.பி.என். பில்டர்ஸ், திருப்பூர் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் சம்பள விகிதத்தில் இரண்டு மாத காலம் மட்டும் (01.05.2022 முதல் 30.06.2022 வரை) ஒப்பந்தக்காலத்தினை நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.15,70,000/- க்கும் நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1.பொது சுகாதாரப்பணியின் நலன் கருதி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்த நீட்டிப்பு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

2.இச்செலவினத்தினை திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

3.இரண்டு மாதம் நீட்டிப்பு அல்லது நகராட்சி நிர்வாக இயக்குநர் திருப்பூர் அவர்களின் திருத்திய உத்திரவு வரும் வரையில்.

<u>ந.க.எண்.137/2020/எச்.1</u>

தீர்மானம் எண் : 61

01.05.2022 முதல் 30.06.2022 வரை நடைமுறையில் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு 2 மாத காலத்திற்கு ஒப்பந்தம் நீட்டிப்பு செய்து உத்திரவிடப்படுகிறது. நாள் 09.05.2022

**பொருள் : 21**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை -28 அவர்களின் கடிதம் எண். 28369/ஜே 3 நாள்.04.12.2018 சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வார்டு எண்.11,12,23 முதல் வார்டுகள் 27 வரையுள்ள பகுதிகளில் 01.04.2020 முதல் 31.03.2021 வரை (Outsourcing) தனியார் வசம் பணி நீட்டிப்பு செய்து 55 தூய்மை பணியாளாகள் மூலம் தூய்மைப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வந்தனர். தற்போது வி.பி.என்.பில்டர்ஸ் என்னும் தனியார் நிறுவனத்திற்கு தொடர்ந்து ஒரு மாத காலம் என்ற

முறையில் 01.04.2021 முதல் 30.04.2022 வரை பணி நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்படி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதிக்காலம் முடிவடையும் நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அனுமதி பெறப்பட கருத்துரு நகராட்சிகள் நிர்வாக இயக்குநரகம் அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

மேற்காணும் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள 55 தூய்மைப்பணியாளர்களின் வெளிமுகமை நிறுவனத்தின் ஒப்பந்தக்காலத்தினை 01.5.2022 முதல் 30.06.2022 வரையிலான இரண்டு மாத காலத்திற்கு பொது சுகாதார பணியின் அவசியம் கருதி தனியார் நிறுவனமான வி.பி.என். பில்டர்ஸ், திருப்பூர் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் சம்பள விகிதத்தில் 01.5.2022 முதல் 30.06.2022 வரையிலான இரண்டு மாத காலத்திற்கு ஒப்பந்தக்காலத்தினை நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.17,00,000/- க்கு நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1.பொது சுகாதாரப்பணியின் நலன் கருதி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்த நீட்டிப்பு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

2.இச்செலவினத்தினை திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

3.இரண்டு மாதம் நீட்டிப்பு அல்லது நகராட்சி நிர்வாக இயக்குநர் திருப்பூர் அவர்களின் திருத்திய உத்திரவு வரும் வரையில்.

**ந.க.எண்.1304/2019/எச்.1**

தீர்மானம் எண் : 62

01.05.2022 முதல் 30.06.2022 வரை நடைமுறையில் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு 2 மாத காலத்திற்கு ஒப்பந்தம் நீட்டிப்பு செய்து உத்திரவிடப்படுகிறது. நாள் 09.05.2022

**பொருள் : 22**

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட அரசு மற்றும் நகராட்சி பராமரிப்பிலுள்ள பள்ளியில் உள்ள கழிப்பறைகளை பராமரிப்பு செய்திட தனியார் ஒப்பந்தம் மூலம் பணியாளர்களை நியமிக்க அரசாணை எண். G.O.(MS) No. 166 நாள். 23.11.2016 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) இன்படி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி சத்தியமங்கலம் நகராட்சியில் கீழ்க்காணும் விபரப்படி பள்ளிகள் உள்ளன.

| வ.எண் | பள்ளி விபரம் | பணியாளர் |
|---|---|---|
| 1 | நகராட்சி ஆரம்ப பள்ளி, ரங்கசமுத்திரம் | 2 |
| 2 | நகராட்சி உயர்நிலைப்பள்ளி, ரங்கசமுத்திரம் | 3 |
| 3 | நகராட்சி ஆரம்ப பள்ளி, ஆர். எம்.பி. நகர் | 2 |
| 4 | நகராட்சி நடுநிலைப் பள்ளி, சத்தியமங்கலம் | 3 |
| 5 | நகராட்சி துவக்கப்பள்ளி, கொளத்தூர் | 2 |
| 6 | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி | 4 |
| | **மொத்தம்** | **16** |

இவ்வலுவலக ந.க.எண். 650/2019/எச்.1 நாள். 30.06.2019 இன்படி 01.07.2019 முதல் 30.06.2020 வரையிலான காலத்திற்கு வெளிக்கொணர்வு முறையில் பள்ளிக் கழிப்பறைகள் தூய்மையாக பராமரித்தல் பணியினை மேற்கொள்ள உத்திரவிடப்பட்டு தற்போது 30.06.2020 உடன் மேற்படி பணியின் காலம் நிறைவு பெறுவதால், மீண்டும் 01.07.2020 முதல் 30.06.2021 முடிவுள்ள ஓராண்டு காலத்திற்கு மேற்காணும் 6 பள்ளிகளுக்கு 16 பணியாளர்கள் நிபந்தனைகளுக்குட்பட்டு தற்காலிகமான முறையில் பணி பார்க்கப்பட்டு பழைய ஊதிய விகிதத்தில் ஊதியம் வழங்கப்பட்டு வந்தது.

மேலும் கொரோனா கட்டுப்பாடுகள் அமலில் இருந்ததால் 01.07.2021 வரை பள்ளிகள் திறக்கப்படவில்லை. எனவே பள்ளி தூய்மை பணி செய்யும் பணியாளர்கள் (School Toilet) பணி உத்திரவு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

தற்போது மீண்டும் கொரோனா கட்டுப்பாட்டு தளர்வுகள் செய்யப்பட்டதின் கீழ் பள்ளிகள் திறக்கப்பட்டதின் பொருட்டு 16 தூய்மை பணியாளர்களுக்கான ஒப்பந்தக் காலத்தினை 01.05.2022 முதல் 30.06.2022 வரை ஏற்கனவே தூய்மை பணிகளை மேற்கொண்டு வந்த V.B.N. பில்டர்ஸ், திருப்பூர் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் சம்பள விகிதத்தில் 01.5.2022 முதல் 30.06.2022 வரையிலான இரண்டு மாத காலத்திற்கு நிறுத்தி வைக்கப்பட்ட ஒப்பந்தக்காலத்தினை நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 5,05,000/- க்கு நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1. பள்ளி மாணவ மாணவியரின் நலன் கருதி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்த நீட்டிப்பு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

2.இச்செலவினத்தினை பள்ளிக்கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண். 541/2020/எச்.1

தீர்மானம் எண் : 63 01.05.2022 முதல் 30.06.2022 வரை நடைமுறையில் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு 2 மாத காலத்திற்கு ஒப்பந்தம் நீட்டிப்பு செய்து உத்திரவிடப்படுகிறது. நாள் 09.05.2022

பொருள் : 23

சத்தியமங்கலம் நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் 2.0 ன்படி 20 எண்ணிக்கையிலான தனிநபர் கழிப்பறை கட்டிக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கான மத்திய அரசு நிதி நபர் ஒன்றுக்கு ரூ.4,000/- வீதம் 20 நபர்களுக்கு தொகை ரூ.80,000/- மாநில அரசு நிதி நபர் ஒன்றுக்கு ரூ.2,666/- வீதம் 20 நபர்களுக்கு தொகை ரூ.53,320/- ம் நகராட்சி நிதி நபர் ஒன்றுக்கு ரூ.2,666/- வீதம் 20 நபர்களுக்கு தொகை ரூ.53,320/- ம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் விழிப்புணர்வு நடவடிக்கை ( IEC Activities) அதற்கான நிதி ரூ.12,62,420/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளவும், 20 தகுதி வாய்ந்த பயனாளிகளை தேர்வு செய்து தனி நபர் கழிப்பிடம் கட்ட உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1051/2021/எச்.1

தீர்மானம் எண் : 64 அங்கீகரிக்கப்பட்டது. நாள் 09.05.2022

பொருள் : 24

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டம் 1.திருவள்ளுவர் திடல் நுண் உரக்குடில் 2.அத்தாணி ரோடு உரக்கிடங்கில் இயங்கி வரும் இயந்திரங்கள் (Shredding machine ) - களை அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை நீக்கம் செய்தல் E.M சொலியூசன் பொருட்கள், மற்றும் பிளாஸ்டிக் பேலிங் மற்றும் பேப்பர், டேப், கிளிப்புகள் பொருட்களை விநியோகம் செய்தல் MCC மற்றும் மின் அமைப்புகளில் பழுது பராமரிப்பு செய்யும் பணியினை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள 19.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரு நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளது.

| வரிசை எண் | பொருள் | Vino Contractor Bhavanisagar ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | V.B.N Builders, Contractor Tiruppur. ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | நகராட்சி நூரண்ணுயிர் உரமாக்கும் திட்டத்தில் உள்ள இயந்திரங்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை | 3,42,000/- | 3,45,000/- |

| | | | |
|---|---|---|---|
| | பழுது நீக்கம் செய்தல் (ஒரு வருடத்திற்கு) | | |
| 2 | ஈ.எம். சொலியூசன் தயாரிக்க தேவையான பொருட்கள் விநியோகம் செய்தல் (ஒரு வருடத்திற்கு) | 1,60,000/- | 1,64,000/- |
| 3 | பிளாஸ்டிக் பேலிங் மற்றும் பேப்பர் பேலிங் தயாரிக்கத் தேவையான டேப் மற்றும் கிளிப்புகள் விநியோகம் செய்தல். (ஒரு வருடத்திற்கு) | 1,45,000 | 1,45,500/- |
| 4 | MCC மற்றும் மின் அமைப்புகளில் பழுது ஏற்படும் பொழுது உடன் பழுது பார்த்தல் (ஒரு வருடத்திற்கு) | 1,45,000/- | 1,45,500/- |
| | **மொத்தம்** | **7,92,000/-** | **8,00,000/-** |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி கலம் எண்.3 இல் கண்டுள்ள Vino Contractor, Bhavanisagar நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி மிகவும் குறைவாக உள்ளது. அதனை ஏற்று அங்கீகரிக்க நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலககுறிப்பு:- பொது சுகாதாரப்பணியின் நலன் கருதி நகர் மனறம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 567/2022/எச்.1**

தீர்மானம் எண் : 65 அங்கீகரிக்கப்பட்டது. நாள் 09.05.2022

**பொருள் : 25**

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகரில் உருவாகும் திடக்கழிவுகளை முதன்மை சேகரம் செய்ய பயன்படுத்தப்படும் தள்ளு வண்டி (push cart) வாகனங்களில் பழுதுகளை பழுது நீக்கம் செய்தல் மற்றும் வாகனங்களுக்கு வண்ணம் தீட்டி செய்து தரும் பணிக்கு தகுதி வாய்ந்த நிறுவனங்களிடம் 19.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு இரு நிறுவனங்கள் அளித்துள்ளன.

| வரிசை எண் | பொருள் | Vino Contractor Bhavanisagar ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | V.B.N Builders, Contractor Tiruppur. ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவுகள் முதன்மை சேகரம் செய்தல் பணிக்கு பயன்படுத்தப்படும் தள்ளு வண்டிகளில் பழுதுகளை பழுது நீக்கம் செய்தல் மற்றும் வண்ணம் தீட்டி செய்து தரும் பணி (ஒரு வருடத்திற்கு) | 1,75,500/- | 1,77,000/- |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி கலம் எண்.3 இல் கண்டுள்ள Vino Contractor, Bhavanisagar நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி மிகவும் குறைவாக உள்ளது. அதனை ஏற்று அங்கீகரிக்க நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:- பொது சுகாதாரப்பணியின் நலன் கருதி நகர் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 566/2022/எச்.1**

தீர்மானம் எண் : 66 அங்கீகரிக்கப்பட்டது. நாள் 09.05.2022

பொருள் : 26

பொது சுகாதாரப்பிரிவு வாகனம் எண்:TN 36 AM 5877- க்கு பழுதுகள் மற்றும் பராமரிப்பு சரி செய்யும் பணிக்கு 11.04.2022 தேதியன்று வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகள் நகர் மன்றத்தின் அனுமதி வேண்டி ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டர்ஸ் ஒர்க்ஸ் | ரூ.34,500/- |
| 2 | முருகன் ஆட்டோஸ் | ரூ.39,800/- |

மேலும் மேற்கண்ட பணிக்கு நகர்மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடைவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு :** குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டர்ஸ் ஒர்க்ஸ் என்னும் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க நகர்மன்றம் அனுமதிக்காலம்.

ந.க.எண்.567 /2022/ எச்1

தீர்மானம் எண் : 67 அங்கீகரிக்கப்பட்டது. நாள் 09.05.2022

பொருள் : 27

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகரில் உருவாகும் திடக்கழிவுகளை முதன்மை சேகரம் செய்ய பயன்படுத்தப்படும் BOV வாகனங்களில் பழுதுகளை நீக்கம் செய்து தரும் பணிக்கு தகுதி வாய்ந்த நிறுவனங்களிடம் 19.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு இரு நிறுவனங்கள் அளித்துள்ளன.

| வரிசை எண் | பொருள் | DS என்ஜினியரிங் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | Jayam Equipments and Engineering DharaPuram ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவுகள் முதன்மை சேகரம் செய்தல் பணிக்கு பயன்படுதப்படும் BOV வாகனங்கள் பழுதுகளை நீக்கம் செய்து தரும் பணி (ஒரு வருடத்திற்கு) | 1,53,820/-/- | 1,70,123/- |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி கலம் எண்.3 இல் கண்டுள்ள DS என்ஜினியரிங் ஈரோடு நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி மிகவும் குறைவாக உள்ளது. அதனை ஏற்று அங்கீகரிக்க நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:- பொது சுகாதாரப்பணியின் நலன் கருதி நகர் மனறம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 568/2022/எச்.1

தீர்மானம் எண் : 68 அங்கீகரிக்கப்பட்டது. நாள் 09.05.2022

நகர்மன்ற தலைவர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

இடம் : சத்தியமங்கலம்.

நாள் : 09.05.2022

அவசரக் கூட்டம்

நகராட்சி அலுவலகம்
சத்தியமங்கலம்

**2022-ஆம் ஆண்டு மே மாதம் 23.05.2022-ஆம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தின் நடவடிக்கைகள்**

பொருள் : 1

சொத்துவரி/காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசாணை ( நிலை) எண். 52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ( நநி4) நாள். 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க. எண். 40032/2012/ஆர்1 நாள். 01.04.2022 ஆகியவற்றின் அடிப்படையில், சொத்துவரி/ காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022-2023 ஆம் அண்டு முதலாம் அரையாண்டு (01.04.022) முதல் சொத்துவரி பொது சீராய்வு செய்திட நகர்மன்ற 06.04.2022 தேதிய 73-ம் எண் தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து சொத்து உரிமையாளர்கள் சொத்துவரி சீராய்வு செய்யும் பணி தொடர்பாக ஆட்சேபணைகள் / ஆலோசணைகள் ஏதும் இருப்பின் 30 தினங்களுக்குள் நேரிடையாகவோ / இணைதளம் மூலமாகவோ சமர்ப்பித்திட பொதுமக்கள் அறிந்திடும் வகையில்(14.04.2022)மாலைமலர், (14.04.2022) தினகரன் ஆகிய தமிழ் தினசரி செய்தி தாள்களிலும், (14.04.2022) ஆங்கில நாளிதழிலும் அலுவலக விளம்பர பலகையிலும் விளம்பரம்படுத்தப்பட்டது. 30 தினங்கள் கடந்த நிலையில் பொது மக்கள் / சொத்து உரிமையாளர்களிடமிருந்து 4800 ஆட்சேபணைகள் மட்டும் வரப்பெற்றுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 69 பதிவு செய்யப்பட்டது. நாள் 23/05/2022

ஆணையாளர் நகர்மன்ற தலைவர்